## December 14, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. புதிய தலைமைத் தகவல் ஆணையராக (சிஐசி) முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி ராஜ்குமார் கோயல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
   i. அவருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திங்கள்கிழமை (டிச.15) பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.
   ii. முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் 8 தகவல் ஆணையர்களின் பெயர்களை பரிந்துரை செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
   iii. தலைமைத் தகவல் ஆணையத்துக்கு ஒரு தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் அதிகபட்சமாக 10 தலைமை ஆணையர்கள் இருக்கலாம். ஏற்கெனவே ஆனந்தி ராமலிங்கம் மற்றும் வினோத் குமார் திவாரி ஆகியோர் தகவல் ஆணையர்களாக பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், மீதமுள்ள 8 பணியிடங்களுக்கு பிரதமர் தலைமையிலான குழு பெயர்களை பரிந்துரைத்துள்ளது.
   iv. அதன்படி ரயில்வே வாரியத்தின் முன்னாள் தலைவர் ஜெயா வர்மா சின்ஹா, முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி ஸ்வாகத் தாஸ், முன்னாள் மத்திய செயலக பணிகள் அதிகாரி சஞ்சீவ் குமார் ஜிண்டால், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சுரேந்திர சிங் மீனா, முன்னாள் இந்திய வனத் துறை அதிகாரி குஷ்வந்த் சிங் சேத்தி, மூத்த பத்திரிகையாளர்கள் பி.ஆர்.ரமேஷ் மற்றும் ஆசுதோஷ்சதுர்வேதி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரிய சட்ட உறுப்பினர் சுதாராணி ரேலங்கி ஆகியோர் தகவல் ஆணையர்களாக பதவியேற்கவுள்ளனர். இதனால் 9 ஆண்டுகளுக்குப் பின் முழு பலத்துடன் தலைமைத் தகவல் ஆணையம் செயல்படவுள்ளது.
   v. தலைமைத் தகவல் ஆணையராக இருந்த ஹீராலால் சமாரியாவின் பதவிக்காலம் செப்.13-ஆம் தேதி நிறைவடைந்த நிலையில் அந்தப் பணியிடம் காலியாக இருந்தது. இதையடுத்து, ராஜ்குமார் கோயல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
2. கிழக்கு ஆப்பிரிக்க பிராந்திய அமைப்பான இகாடிலிருந்து (IGAD) எரித்ரியா மீண்டும் விலகியுள்ளது. இது குறித்து எரித்ரிய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிப்பட்டுள்ளதாவது:
   i. இகாட் அமைப்பு அதன்சட்டப்பூர்வ அதிகாரத்தையும் முக்கியத்துவத்தையும் இழந்துவிட்ட இது உறுப்பு நாடுகளுக்கு எந்த பலனையும் அளிக்கவில்லை. பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்கவில்லை. குறிப்பாக எரித்ரியாவுக்கு எதிரான கருவியாக மாறியுள்ளது. எனவே, அந்த அமைப்பில் இருந்து விலகிக் கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. ஒத்துழைப்பை நோக்கத்தில் கிழக்கு ஆப்பிரிக்க பிராந்திய அமைதி, உணவுப் பாதுகாப்பு, பொருளாதார ஊக்குவிக்கும் இகாட் அமைப்பு 1996-இல் உருவாக்கப்பட்டது. இதில் எத்தியோப்பியா, எரித்ரியா, கென்யா, சோமாலியா, தெற்கு சூடான், சூடான், உகாண்டா, ஜிபூட்டி ஆகிய 8 நாடுகள் இடம் பெற்றுள்ளன. எரித்திரியா இப்போது விலகிவிட்டது.
3. இந்தோனேசியாவின் வடமேற்கு சுமத்ரா தீவில் கடந்த இரு வாரங்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது.
   i. கடந்த இரு வாரங்களாக தொடர்ந்த கனமழை, சுமத்ரா தீவின் வடக்கு பகுதியில் கடந்த 2004-ல் ஏற்பட்ட சுனாமிக்கு அடுத்தபடியாக பேரழிவை

ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

4. பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகஷென்கோவின் உத்தரவின்படி, அரசியல் கைதிகள் உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகளில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 123 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
   i. அதிபர் லுகாஷென்கோவின் மனிதாபிமான உத்தரவின்படி, 123 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள், அரசியல் கைதிகள் உள்பட பலர் அடங்குவர். இது நாட்டின் சமூக ஸ்திரத்தன்மைக்கு உதவும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020 அதிபர் தேர்தலுக்குப்பிறகு ஏற்பட்ட போராட்டங்களின்போது ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். இது 'அதிகார துஷ்பிரயோகம் என்று ஐரோப்பிய யூனியனும், அமெரிக்காவும் சாடின. இந்த விவகாரம் தொடர்பாக பெலாரஸ் பொட்டாஸியத்துக்கு அமெரிக்கா தடை விதித்தது.
   ii. அந்தத் தடையை விலக்கிக் கொள்ளப் போவதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்ததைத் தொடர்ந்து, போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்கள் 123 பேரை விடுதலை செய்ததாக பெலாரஸ் அரசு தற்போது அறிவித்துள்ளது.

5. கம்போடியாவுடன் ஐந்து நாள்களாகத் தொடரும் எல்லை மோதலில் 4 தாய்லாந்து வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.
   i. 1904,1907-ஆம் ஆண்டுகளில் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே எல்லை வகுக்கப்பட்டது. இருந்தாலும், 11-ஆம் நூற்றாண்டு ஹிந்து கோயில் அமைந்துள்ள ப்ரே விஹேர் பகுதியை மையமாகக் கொண்டு இருநாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை நீடித்து வருகிறது. அந்தக் கோயில் கம்போடியாவுக்குத்தான் சொந்தம் என்று சர்வதேச நீதிமன்றம் கடந்த 2008-இல் தீர்ப்பளித்தது. இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை காரணமாக அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வந்தது.
   ii. இந்தச் சூழலில், தாய்லாந்து-கம்போடியா இடையே கடந்த ஜூலை மாதம் 5 நாள்களுக்கு நீடித்த போரில் 48 பேர் கொல்லப்பட்டனர்; 3 லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர்.
   iii. அதையடுத்து, டிரம்ப் முன்னிலையில் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே மலேசிய தலைநகர் கோலாலம் பூரில் கடந்த அக்டோபர் 26-ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமானது. மலேசியா பிரதமர் அன்வர் இப்ரா ஹிமின் முன்முயற்சியில் உருவான இந்த ஒப்பந்தம், தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான எல்லை சர்ச்சையை தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
   iv. ஆனால், கம்போடியா புதைத்துவைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி தங்கள் நாட்டு வீரர் காயமடைந்ததாகக் குற்றஞ்சாட்டிய தாய்லாந்து, போர் நிறுத்த ஒப்பந்தத்தை நவம்பர் 10-ஆம் தேதி ரத்து செய்தது. கம்போடியாவோ, அது ஏற்கெனவே இருந்த பழைய கண்ணிவெடி என விளக்கமளித்தது.
   v. இந்த நிலையில், தாய்லாந்தின் சிசாகெட் மற்றும் உபோன் ரட்சதானி மாகாணங்களில் உள்ள எல்லைப் பகுதிகளில், இருதரப்பினரும் மீண்டும் மோதலில் ஈடுபட்டனர்.

6. பிரபல செஸ் வீரர்கள் - பிரக்ஞானந்தா (இந்தியா), அர்ஜுன் எரிகைசி (இந்தியா), ஹரிகா (இந்தியா), வோலோடர் (ரஷ்யா), அலிரேசா (பிரான்ஸ்).

7. பாகிஸ்தானில் உள்ள இரு பல்கலைக்கழகங்களில் சம்ஸ்கிருத மொழிக்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
   i. இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு முதல்முறையாக பஞ்சாப் லாகூர்

பல்கலைக்கழகம் (அரசு) மற்றும் லாகூர் மேலாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் (தனியார்) 3 மாத சம்ஸ்கிருத பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

ii. இருநாட்டு பாரம்பரியத்திலும் முக்கியபி பங்கு வகிப்பதால் செம்மொழி அந்தஸ்து பெற்ற சம்ஸ்கிருத மொழி பயிற்சி வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாணவர்களுக்கு மகாபாரதம் மற்றும் பக்வத் கீதை கற்றுத்தர திட்டமிட்டு வருவதாக பஞ்சாப் பல்கலைக்கழக ஹிந்தித் துறை பேராசிரியர் அசோக் குமார் தெரிவித்தார்.

8. இந்திய இறக்குமதிப் பொருள்கள் மீதான வரியை மெக்ஸிகோ தன்னிச்சையாக உயர்த்தியுள்ள சூழலில், இந்த விவகாரத்துக்கு சுமுகத் தீர்வுகாண அந்நாட்டுடன் மத்திய அரசு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

i. தங்களுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபடாத இந்தியா, சீனா, தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை 5 முதல் 50 சதவீதம் வரை மெக்ஸிகோ உயர்த்தியுள்ளது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு 50 சதவீத வரி அறிவிக்கப்பட்டுள்ளது. இது, அடுத்த ஆண்டுமுதல் அமலாகவுள்ள நிலையில், இந்திய ஏற்றுமதியாளர்களின் நலன் காக்கும் முயற்சிகளில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. அதன்படி, இருதரப்பும் பலனடையும் தீர்வைக் கண்டறிய மெக்ஸிகோவுடன் இந்தியா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

ii. கடந்த 2024-25-இல் மெக்ஸிகோவுக்கு 5.75 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. அந்நாட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி மதிப்பு 2.9 பில் லியன் டாலராகும்.

9. தில்லியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் நடைபெற்ற யுனெஸ்கோவின் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கு இடையேயான குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

i. கடந்த திங்கள்கிழமை தொடங்கி வியாழக்கிழமை வரை 4 நாள்கள் அமர்வுகளில், இந்தியா சார்பில் முன்மொழியப்பட்ட தீபாவளி பண்டிகை, ஈரானின் கண்ணாடிக் கலை வேலைப்பாடுகள், ஐக்கிய அரபு அமீரகத்தின் பாரம்பரிய நடனம், ஸ்விட்சர்லாந்தின் யோடெல்லிங் உள்ளிட்ட 67 பாரம்பரியக் கூறுகள் யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதன்மூலம், இப்போது 157 நாடுகளின் மொத்தம் 849 பாரம்பரிய நடைமுறைகள், யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

ii. செங்கோட்டை வளாகத்தில் கூட்டத்தின் நிறைவு விழா வெள்ளிக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது. யுனெஸ்கோவின் உயர் அதிகாரி ஒருவர் பேசுகையில், 'அடுத்த ஆண்டுக்கான கூட்டம் சீனாவின் ஸியாமென் நகரில் நடைபெறும். செங்கோட்டை போன்ற பிரம்மாண்டமான மற்றும் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட தளத்தில் இக்கூட்டம் நடத்தப்பட்டது, பங்கேற்ற பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது' என்று குறிப்பிட்டார்.

10. புதிய ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) (விசா) கட்டணத்தை ரூ. 90 லட்சமாக (ஒரு லட்சம் டாலர்) உயர்த்தும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகத்துக்கு எதிராக அங்குள்ள 19 மாகாணங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன.

i. புதிய ஹெச்-1பி நுழைவு இசைவுக் கட்டணத்தை பன்மடங்காக உயர்த்த டிரம்ப் நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. இந்த நுழைவு இசைவுக்கான கட்டணம் தற்போது ரூ.1.47 லட்சமாக உள்ள நிலையில், அதை ரூ.90 லட்சமாக உயர்த்தும் உத்தரவில் கடந்த செப்டம்பர் 19-ஆம் தேதி டிரம்ப் கையொப்பமிட்டார். உலகம் முழுவதும்

இருந்து பல்வேறு துறை சார்ந்த திறமையான பணியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து பணி வழங்க அமெரிக்க நிறுவனங்கள் ஹெச்-1பி நுழைவு இசை வைப்பயன்படுத்தி வருகின்றன. தற்போது இந்தப் பணியாளர்கள், அமெரிக்காவுக்கு வேலைக்குச் செல்ல இனி ரூ.90 லட்சம் செலுத்தி ஹெச்1-பி நுழைவு இசைவைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ii. இந்த ஹெச்1-பி நுழைவு இசைவு மூலம் இந்தியர்களே அதிக எண்ணிக்கையில் அமெரிக்காவில் வேலைவாய்ப்பைப் பெற்று பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

11. முப்படை தலை மைத் தளபதி - அனில் செளஹான்.

12. ஒருங்கிணைந்த நீதித் துறை கொள்கையை அமல்படுத்துவது அவசியம் என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் வலியுறுத்தினார்.

i. பல மனுதாரர்கள் வழக்குகளில் வெற்றி பெற்றபோதிலும் சிக்கலான சட்ட மொழி காரணமாக தீர்ப்பில் உள்ள கருத்துகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுக்குச் சாதகமாக உத்தரவு வந்தபோதிலும் தீர்ப்பில் பயன்படுத்தும் மொழி, நடைமுறையில் பயன்படுத்தாத சொற்களோடு இருப்பதால் அல்லது எளிதில் புரிந்துகொள்ள முடியாத வகையில் இருப்பதால், தங்களுக்கு என்ன தீர்வு கிடைத்துள்ளது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

ii. எனவே தீர்ப்புகளை எழுதுவதிலும் ஒரே சீரான முறைப் பின்பற் றப்படுவது அதிகரிக்கப்பட வேண்டும். வழக்கின் முடிவுகளைத் தெரி யப்படுத்துவதிலும் ஒருங்கிணைந்த நீதித்துறை அணுகுமுறை தேவை என்று தெரிவித்தார்.

13. அமெரிக்காவின் புதிய வியூக கூட்டமைப்பான பேக்ஸ் சிலிக்காவில் இந்தியாவுக்கு இடமளிக்கப்படாததை முன்வைத்து, பிரதமர் நரேந்திர மோடியை காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

i. ஊடக செய்திகளின்படி, உயர் தொழில்நுட்ப விநியோகச் சங்கிலியில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைக்கும் நோக்கில் 9 நாடுகள் அங்கம் வகிக்கும் பேக்ஸ் சிலிக்கா' கூட்டமைப்பை அமெரிக்கா தொடங்கியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், நெதர்லாந்து, பிரிட்டன், இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. அதேநேரம், இந்தியாவுக்கு அமெரிக்கா இடமளிக்க வில்லை.

ii. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கு அடிப்படையான பொருள்கள் மற்றும் திறன்களைப் பாதுகாப்பதும், கட்டாய சார்புத் தன்மையைக் குறைப்பதுமே இந்தக் கூட்டமைப்பின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா,அமெரிக்கா ஆகிய 4 நாடுகள் அங்கம் வகிக்கும் க்வாட் கூட்டமைப்பில் இந்தியா தவிர மற்ற மூன்று நாடுகளும் புதிய கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ளன.

14. இந்தியா விலிருந்து இறக்குமதி செய்யப்படும். பொருள்கள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த மிக அதிக பட்சமான 50 சதவீத வரி விதிப்பை ரத்து வலியுறுத்தி, செல்வாக்குமிக்க 3 அமெரிக்க எம்.பி.க்கள் சார்பில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

i. வடக்கு கரோலினா மாகாண எம்.பி. டெபோரா ரோஸ், டெக்சாஸ் மாகாண எம்.பி. மார்க் வேஸே, இல்லினாய்ஸ் மாகாண எம்.பி. ராஜா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அமெரிக்கநாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் இந்தத் தீர்மானத்தை அறிமுகம் செய்தனர்.

ii. பரஸ்பர வரிவிதிப்பு நடவடிக்கை என்ற பெயரில் இந்தியா மீது முதலில் 25 சதவீத வரியை விதித்த டிரம்ப், பின்னர் உக்ரைன் மீது போர் நடத்திவரும்

ரஷியாவிடமிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்வதாகக் குற்றஞ்சாட்டி கடந்த ஆகஸ்ட் 27-ஆம் தேதி முதல் மேலும் 25 சதவீத வரியை விதித்தார். இதனால், இந்தியா விலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான பொருள்கள் மீது அமெரிக்காவில் தற்போது 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை காரணமாக இரு நாடுகளிடையேயான உறவு சற்று பாதிக்கப்பட்டுள்ளது. அதிக வரி விதிப்பு காரணமாக, சீனா உள்பட பிற நாடுகளுடன் வர்த்தக உறவை வலுப்படுத்தும் நடவடிக்கையை இந்திய மேற்கொண்டு வருகிறது.

iii. இந்தச் சூழலில், சர்வதேச அவசரகால பொருளாதார அதிகார சட்டத்தின் (ஐஇஇபிஏ) கீழ் இந்திய பொருள்கள் மீது டிரம்ப் விதித்த 50 சதவீத வரியை ரத்து செய்ய வலியுறுத்தி 3 எம்.பி.க்கள் சார்பில் பிரதிநிதிகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.